உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 25.08.2026 • மலர் 04 • இதழ்: 237 • செவ்வாய் • Edition : Nagercoil • 25.08.2026 • Vol : 04 • Issue : 237 • Page : 4 • Rs. 5/-

# மகளிர் கட்டணமில்லா பயணம் 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில் விரிவாக்கம்

## அக்.2ல் அமல் முதல்வர் விஜய் அறிவிப்பு



சென்னை: மகளிர் கட்டணமில்லா பயண திட்டம் வரும் அக்.2 முதல் 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில் விரிவாக்கம் செய்யப்படுவதாக சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவை (ஆக.24 திங்கட்கிழமை) கூடியது. இதில் பேரவையின் 110 விதியின் கீழ் மூன்று முக்கிய அறிவிப்புகளை முதல் விஜய் அறிவித்தார்.

குடும்பத் தலைவிகள் பயன்பெறும் வகையில் 'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆண்டுக்கு மூன்று சிலிண்டர்கள் விலையின்றி வழங்கப்படும் என்றும், பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படும் என்றும் முதல்வர் விஜய் அறிவித்தார்.

மகளிர்கட்டணமில்லா பயணம் விரிவாக்கம்

"ஒரு மாநிலத்தின் உண்மையான முன்னேற்றம் என்பது அதன் பொருளாதார வளர்ச்சியால் மட்டுமல்ல, பெண் கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், வணிகம் மற்றும் சமூக வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் பங்கேற்கும் வாய்ப்புகளாலும் அளவிடப்படுகிறது. மகளிரின் பயணச் சுதந்திரம், அவர்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்கும் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக இருக்கிறது.

தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தில் மாநகரம், நகர்ப்புறங்களில் சாதாரண மற்றும் மலைப் பகுதிப் பேருந்துகளில் 40 கி.மீ. வரை மட்டுமே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறது. எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் பேருந்துகள் மற்றும் புறநகர்ப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் அனுமதிக்கப்படுவதில்லை.

தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் ஒரு மகளிரும் போக்குவரத்துக் கட்டணத்தால் தமது வாய்ப்புகளை இழக்கக்கூடாது என்ற சமூகநீதிச் சிந்தனையை இவ்வரசு முதன்மையாகக் கொண்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, பெருமளவில் பயனளித்திடும் விதமாக, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ம் தேதி முதல் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

அதன்படி, முதல் கட்டமாக மாநகரம், நகரங்களில் சாதாரணப் பேருந்துகள் மட்டுமின்றி மாநகரம், நகர்ப்பகுதிகளில் இயங்கும் எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் அரசுப் பேருந்துகளிலும், மகளிர் கட்டணமில்லாப் பயணங்கள் மேற்கொள்ளலாம்.

மேலும் கூடுதலாக, மாவட்டங்களுக்கிடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில், சாதாரணக் கட்டணப் பேருந்துகளிலும், மகளிர் கட்டணமில்லாப் பயணங்கள் மேற்கொள்ளலாம்.

இத்திட்டத்தில் பயன்பெற, வருமான உச்சவரம்போ மற்றும் மேற்கொள்ளவிரும்பும்பயண எண்ணிக்கையிலோ கட்டுப்பாடுகள் இல்லை. 'வெற்றிப் பயணத் திட்டம்',

இதர சேவைகளிலும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். இதன்மூலம், மாநிலம் முழுவதும் மகளிருக்கான எளிதில் அணுகக்கூடிய பொதுப் போக்குவரத்து வசதி பெருமளவில் கிடைக்கும். இதன்மூலம் மாணவிகள் தொலைதூரத்தில் உள்ள கல்லூரிகளுக்குச் செல்லவும், பணியிடங்களுக்குச் செல்லவும், மருத்துவம் மற்றும் அத்தியாவசியச் சேவைகளுக்கும் கட்டணமின்றி பேருந்துகளில் பயணிக்க இயலும்.

வெற்றிப் பயணம் என்பது கட்டணமில்லா ஒரு பேருந்துப் பயணம் மட்டுமல்ல, ஒரு மாணவியின் கல்வி, ஒரு தொழிலாளியின் வேலை வாய்ப்பு, ஒரு தாயின் குடும்பப் பொறுப்பு, ஒரு தொழில்முனைவோரின் முன்னேற்றம் போன்றவற்றை உறுதிசெய்யும் சமூக முதலீடாகும். தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், மகளிரின் இயக்கச் சுதந்திரத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அரசு உறுதுணையாக இருக்கும்.

இத்திட்டத்தின்கீழ் திருநரும் கட்டணமில்லாப் பயணங்கள் மேற்கொள்ளலாம்

'வெற்றிப் பயணம்' வழியாக மகளிரின் வாய்ப்புகள் விரிவடைந்து, குடும்பங்கள் முன்னேறி, சமூகநீதியும் சமத்துவமும் நிலைபெற்று, வளமான வெற்றித் தமிழ்நாட்டை உருவாக்கும் நமது பயணம் மேலும் வலுப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் ஆண்டுதோறும் தோராயமாக 6000 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும்" என்று முதல்வர் விஜய் அறிவித்தார்.

## குமரி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்



நாகர்கோவில், ஆக.25

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த மக்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 335 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு எளிதில் தீர்வு காணும் நோக்கில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நடைபெற்ற கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறன் பயனாளிகளின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

## குமரியில் ஓணச்சந்தை களை கட்டியது தோவாளையில் ஒரே நாளில் 500 டன் பூக்கள் விற்பனை

### கேரளா வியாபாரிகள் குவிந்தனர்



நாகர்கோவில், ஆக. 25

கேரளாவில் திருவோணம் பண்டிகை முன்னிட்டு குமரி மாவட்டம் தோவாளை பூச்சந்தை களை கட்டியது. கேரளா மாநில வியாபாரிகள், பொதுமக்கள் குவிந்ததால் ஒரே நாளில் 500 டன் பூக்கள் விற்பனையானது.

கேரள மக்களின் சிறப்புமிக்க பண்டிகையான திருவோணம் பண்டிகையில் மாவேலி மன்னனை வரவேற்க மலையாள மக்கள் அத்தப்பூ கோலம் போடுவது வழக்கம். இதற்கு தேவையான பூக்களை தோவாளை பூச்சந்தையில் வாங்கி செல்வது வழக்கம். நாளை திருவோண பண்டிகை கொண்டாடப்படுகிறது. ஆகவே நேற்று காலை முதலே கேரளா வியாபாரிகள், பொதுமக்கள் குடும்பமாக தோவாளை சந்தைக்கு வந்து பூக்களை வாங்கி சென்றனர்.

பூச்சந்தையில் நேற்று பிச்சிப்பூ ஒருகிலோ ரூ.1000, மல்லிகைப்பூ ரூ.700, சம்பங்கி ரூ.250, சேலம் அரளி ரூ. 320, உள்ளூர் அரளி ரூ. 370, பட்டர் ரோஸ் ரூ.200, ரோஸ் ரூ. 200, பாக்கெட் ரோஸ் ரூ. 70, சிவப்பு கிரந்தி ரூ.120 மஞ்சள் கிரந்தி ரூ. 200 என அனைத்து பூக்களும் விலை உயர்ந்து காணப்படுகிறது.

இது குறித்து பூ வியாபாரிகள் சங்க தலைவர் கிருஷ்னகுமார் கூறுகையில்: ஓண பண்டிகையை முன்னிட்டு பெங்களூர், ஒசூர், ராயக்கோட்டை, நிலக்கோட்டை, திண்டுக்கல், கொடைரோடு, மதுரை, மானாமதுரை, வத்தலகுண்டு, கோவில் பட்டி, ராஜபாளையம், சங்கரன் கோவில், தென்காசி, புளியங்குடி, அம்பாசமுத்திரம் திருக்கண்ணங்குடி ஆகிய ஊர்களில் இருந்து லாரிகளில் தோவாளை ள பூச்சந்தைக்கு டன் கணக்கில் பூக்கள் வருகிறது. இதற்காக நேற்று ஒரே நாளில் மட்டும் 500 டன் வரை பூக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இரவு முதல் பூக்கள் விற்பனை மேலும் அதிகரிக்கும். ஆகவே இன்னும் ஆயிரம் டன் பூக்கள் வர இருப்பதாக கூறினார்.



## கிருஷ்ணகிரியில் சீர்கேடான பொதுக்கழிப்பிடம்

### உடனடியாக சீரமைக்க நகர்மன்ற தலைவர் உறுதி

கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 25:

கிருஷ்ணகிரி பைரப்பா தெரு ஆனந்த் தியேட்டர் அருகே பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் பயன்பாட்டிற்காக நகராட்சியின்சார்பில் பொது கழிப்பிட வசதி சுமார் 15 வருடமாக உள்ளது. இதை அங்குள்ள சிலர் சமூக விரோத செயலுக்கு உபயோகப்படுத்துவதாகவும், சீர்கேடாக உள்ள கழிப்பிடத்தை சரி செய்து தந்திட வேண்டுமென சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திரமோகனிடம் தெரிவித்ததை அடுத்து, சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் சிவ சக்திவேல் தலைமையில் உடனடியாக பார்வையிட்டு, கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி அவர்களுடன் உடனடியாக ஆய்வு மேற்கொண்டதில், அங்குள்ளஅனைத்து குறைகளும் கண்டறியப்பட்டது. பின்னர் செய்தியாளர்களிடம் நகர மன்ற தலைவர் சாவித்திரி கடலூர் மூர்த்தி அவர்கள் பேசுகையில், சமூக நுகர்வோர் சங்க மாநில பொதுச் செயலாளர் கூறியதன் அடிப்படையில் உடனடியாக ஆய்வு மேற்கொண்டதில் அனைத்து குறைகளும் கண்டறியப்பட்டு விரைவில் இதை சரி செய்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். இந்த நிகழ்ச்சியில், நுகர்வோர் சங்க மகளிர் அணி மாவட்ட துணை தலைவி சரண்யா, மாவட்ட செயற்குழு உறுப்பினர் தில்லை ராஜா, மாநில செயற்குழு உறுப்பினர் வடிவேல், மற்றும் மாவட்டச் செயலாளர் மாதேஷ், நுகர்வோர் சங்கப் பிரதிநிதிகளான சக்தி, நாகராஜ், ஹரி, ஆகியோர் உடன் இருந்தனர். பல வருடமாக சீர்கேடாக இருந்த இந்த பிரச்சினையை உடனடியாக சரி செய்வது தருவதாக கூறிய நகர மன்ற தலைவருக்கு நன்றியும், பாராட்டுகளையும், சமூக நுகர்வோர் சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திரமோகன் தெரிவித்துக் கொண்டார்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

## நாகர்கோவிலில் ஹெல்மெட் விழிப்புணர்வு பேரணி; போலீஸ் எஸ் பி ஸ்டாலின் பங்கேற்றார்



நாகர்கோவில், ஆக.25

நாகர்கோவிலில் காவல் துறை சார்பில் நடைபெற்ற ஹெல்மெட் விழிப்புணர்வு பேரணியில் மாவட்ட போலீஸ் எஸ் பி ஸ்டாலின் பங்கேற்று பைக் ஓட்டி சென்றார்.

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமையில், சாலைப் பாதுகாப்பை வலியுறுத்தியும், இருசக்கர வாகனங்களில் பயணிக்கும் ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்ந்து பயணிக்கும் நபர் என இருவரும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் என்பதை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையிலும் மெகா இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

நாகர்கோவில் வடசேரி ஜங்ஷனில் தொடங்கிய பேரணி, மணிமேடை, கோர்ட் ரோடு , கலெக்டர் அலுவலகம், பார்வதிபுரம் பாலம் வழியாகச் சென்று மீண்டும் வடசேரி ஜங்ஷனில் நிறைவடைந்தது.

இப்பேரணியில் நாகர்கோவில் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் இளஞ்செழியன், வடசேரி காவல் நிலைய ஆய்வாளர் மோகன ஐயர், நாகர்கோவில் போக்குவரத்து பிரிவு ஆய்வாளர் அருண் மேலும் சுமார் 100 கும் மேற்பட்ட காவல் துறையினர் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

## தஞ்சாவூர் அருங்காட்சியகத்தில் வன உயிர் புகைப்பட கண்காட்சி

### கலெக்டர் ரேவதி பார்வையிட்டார்



தஞ்சாவூர் ஆகஸ்ட் 25

தஞ்சாவூர் அருங்காட்சியகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வன அலுவலகம் சார்பில் உலக புகைப்பட தினத்தையொட்டி வன உயிரினங்களைபோற்றுவோம், இயற்கையை பாதுகாப்போம் என்னும் நோக்கத்தில் வன உயிர் புகைப்பட கண்காட்சி நடைபெற்று வருகிறது

இந்த கண்காட்சியை மாவட்ட கலெக்டர் ரேவதி நேரில் பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியதாவது :

வன உயிர் புகைப்பட கண்காட்சி அடுத்த மாதம் செப்டம்பர் 19ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் 100க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் பெரும்பாலானவை, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த புகைப்பட கலைஞர்களால், தஞ்சாவூர் மாவட்டத்திற்குள்ளேயே எடுக்கப் பட்டவை குழந்தைகள்உள்படஅனைத்து வயதினரும் பார்வையிட்டு அறிந்து கொள்ள வேண்டிய பல அரிய உயிரினங்களின் புகைப்படங்கள்உள்ளன, என்றார்

# வேலூர் விருபாட்சிபுரம் அருள்மிகு வழித்துணை விநாயகர் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



வேலூர், ஆக 25 வேலூர் விருப்பாட்சிபுரம் பிள்ளையார் கோவில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு வழித்துணை விநாயகர் அங்காள பரமேஸ்வரி அம்மன் பாலமுருகன் திருக்கோயிலின் புனராவர்த்தன ஜீர்ணோதாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் பாலமதி அருள்மிகு குழந்தை வேலாயுதபாணி திருக்கோயில் தெய்வத்திரு சிவனடிமை ராமகிருஷ்ணா சாது அவர்களின் நல்லாசியுடன் ஆகஸ்ட் 23 ஞாயிறன்று நடைபெற்றது. இவ்விழாவையொட்டி விக்னேஸ்வரர் பூஜை புண்ணியாஹவாசனம் சங்கல்பம் ஸ்ரீ மகா கணபதி ஹோமமம் நவகிரக ஹோமமம் கோ பூஜை தன பூஜை பூர்ணாஹூதி வாஸ்து சாந்தி பிரவேச பலி கும்ப அலங்காரம் முதல் காலயாக பூஜை இரண்டாம் காலயாக பூஜை ஆகியவை செய்யப்பட்டு காலை 10.20 மணி அளவில் கோபுரம் விமானம் மூலவர் மற்றும் பரிவார தேவைகளுக்கு வெகு சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்அனைத்து பக்தர்களுக்கும் பொது மக்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் இரவு மேள தாள, வான வேடிக்கை, செண்டை மேளம் முழக்கத்துடன் விநாயகர் அம்மன், முருகன் திருவீதி உலா நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை ஆலய விழா குழுவினர் நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# களியக்காவிளை அருகே பெண் கத்தியால் குத்தி கொலை; வாலிபர் கைது

களியக்காவிளை, ஆக்.25 களியக்காவிளை அடுத்த கைதக்குழி, நாரகம்விளை பகுதியை சார்ந்தவர் ஸ்டீபன் மகன் சிஜூ (24) இவர் மனநலம் பாதித்தவர் ஆகும். இவர் கடந்த 2021ம் வருடம் தனது தாயை கொலை செய்துள்ளார். இதனால் சிறையில் அடைக்கப்பட்டார். இந்தநிலையில் கடந்த ஒரு மாதத்திற்கு முன் விடுதலை செய்யப்பட்டர். இவருக்கு மன நலம் பாதிப்பு மீண்டும் அதிகமாகியுள்ளது. ஆகவே கைதக்குழி பகுதி மற்றும் அதன் சுந்துவட்டார பகுதிகளில் சுற்றி திரிந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தனது பக்கத்து வீட்டில் பெரியம்மா உறவு முறையான அசோக்குமார் மனைவி லீலா (56) தனியாக வீட்டில் இருந்துள்ளார். அப்போது அங்கே சென்ற சிஜு தான் வைத்திருந்த கத்தியால் லீலாவை கத்தியால் பல முறை குத்தி யுள்ளார். மேலும் கல் எடுத்து லீலாவின் தலையில் போட்டு கொன்று விட்டு ரத்தக்கறை படிந்த கத்தியுடன் சுற்றித் திரித்துள்ளார். இதனை பார்த்த அப்பகுதியினர் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

போலீசார் சம்பவ இடம் வந்து வாலிபரை சுற்றி வளைத்து பிடித்தனர். போலீசார் விசாரணையில் தனது பெரியம்மாவை கொன்றது குறித்து தெரிவித்துள்ளார். போலீசார் சம்பவ இடம் சென்று சடலத்தை மீட்டு ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து வழக்கு பதிவு செய்து வாலிபரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தடிக்காரன் கோணம் சந்திப்பில் பொதுக் கழிப்பிடம் கட்ட அரசு அனுமதி; வேலை துவக்கம்



தடிக்காரன்கோணம் சந்திப்பில் மக்களின் நெடு நாள் கோரிக்கையான கழிப்பிடம் கட்டும் பணி துவங்கப்பட்டது.தடிக்காரன்கோணம் பஞ்சாயத்தில் சுமார் ஆறாயிரம் மக்கள் வசிக்கின்றனர். ஒரு கல்லூரி' ஒரு பள்ளிக்கூடம் 'அரசு மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் 'சந்தை போன்றவை அமைந்துள்ளது. நாள் ஒன்றிற்க்கு ஆயிரத்திற்க்கும் அதிகமான மக்கள் தடிக்காரன்கோணம் சந்திப்பில் அமைந்துள்ள பேருந்து நிறுத்தம் வந்து செல்கின்றனர். தடிக்காரன்கோணம்,கீரிப்பாறை, காளிகேசம், அருமனை, மார்த்தாண்டம், திட்டு விளை, ஆரல்வாய் மொழி, நாகர்கோவில், போன்ற பகுதிகளுக்கு செல்லும் பேருந்துகளும் வந்து செல்கின்றது. இத்தனை வசதிகளும் மக்கள் நடமாட்டமும் உள்ள ஊரின் சந்திப்பில் கழிவறை என்பது இல்லாமல் காணப்பட்டது. இதனால் அவசரத்திற்க்கு இயற்க்கை உபாதை களிக்க முடியாமல் மக்கள்பெரும்அவதிக்கு உள்ளாயினர்.கடந்த ஆட்சி காலங்களில் பஞ்சாயத்து தலைவர்களாய் இருந்தவர்களும் இதை கண்டு கொள்ளவில்லை.இதற்க்கானவிண்ணப்பமனுவை சில பேர் பல வருடங்களாய் அதிகாரிகளிடம் வழங்கி வந்தனர்.இப்போது தடிக்காரன்கோணம் பகுதியை சார்ந்த சமூக சேவகர் ஜெயப்பிரதாப் சிங் முயற்சியால் தற்ப்போது தாவேகா அரசால் ஐந்து லட்ச ரூபாய் நிதி ஒதுக்கபட்டு அதற்க்கான வேலை ஆரம்பிக்கபட்ட அன்று அதை தடுக்கும் நோக்கில் அரசியல் பிரமுகர் ஒருவரால் தேவையற்ற காரணங்கள் கூறி வேலை நிறுத்தப்பட்டது. மறு நாள் சமூக சேவகரின் முயர்ச்சியால் பலகட்ட போராட்டத்திற்க்கு பிற்பாடு பொது மக்கள் முன்னிலையில் கழிவறை கட்டுவதற்க்கான பணி துவங்கப்பட்டது. இதனால் மக்கள் பெரும் மகிழ்சியுற்றனர். இந்த பணியானது எந்த தடங்கலும் இன்றி குறுகிய காலத்தில் வேலை முடித்து மக்கள் பயன் பாட்டிற்க்கு கொண்டுவரவேண்டும். மட்டுமல்லாது அதே பகுதியில் இருக்கும் அரசு புறம்போக்கு இடத்தினை ஒரு தனி நபர் சொந்தம் கொண்டாடி வருகிறார். அதை மீட்டு இரு சக்கர வாகன நிறுத்தம் அமைக்கவேண்டும், என மாவட்ட ஆட்சியருக்கு பொது மக்கள் கோரிக்கை வைத்தனர்.

# போத்தனூர் பகுதிகளை சுற்றியுள்ள கல்லூரி மாணவர்கள் விடுதியில் திடீர் சோதனை : பொதுமக்கள் வரவேற்பு !



கோவை, ஆக. 25: தமிழக அரசின் “போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு” இலக்கை முன்னிறுத்தி, கோவை மாநகரை “போதையில்லா கோவை”யாக உருவாக்கும் நோக்கில், காவல் துறை சார்பில் கல்லூரி மாணவர்கள் தங்கும் பகுதிகளில் சிறப்பு சோதனை நடத்தப்பட்டது.

கோவை மாநகர் தெற்கு காவல்துணை ஆணையர் கார்த்திகேயன் உத்தரவின்பேரில், போத்தனூர், குனியமுத்தூர் மற்றும் செல்வபுரம் காவல் நிலைய ஆய்வாளர்கள் தலைமையில் போலீசார் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து சோதனை மேற்கொண்டனர். போத்தனூர், குனியமுத்தூர், செல்வபுரம், பி.கே. புதூர், பாலு கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் மாணவர்கள் தங்கியுள்ள வீடுகள், அறைகள் மற்றும் ஆண்கள் விடுதிகளில் ஒரே நேரத்தில் சோதனை நடைபெற்றது. 100க்கும் மேற்பட்ட காவலர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுவோர் குறித்தும் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஓணம் தொடர் விடுமுறையால் பெரும்பாலான மாணவர்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றிருந்த நிலையில், சோதனையில் தடை செய்யப்பட்ட பொருட்கள் எதுவும் சிக்கவில்லை.

போதைப்பொருள் விற்பனை, கடத்தல் மற்றும் பயன்பாட்டுக்கு எதிரான தொடர் சோதனைகளும் கண்காணிப்பும் தொடர்ந்து நடைபெறும் என காவல்துறை தெரிவித்துள்ளது.



# சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

சேலம் ஆக 25 பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் வகையில் முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து விரைந்து செயல்பட வேண்டும் எனவும் குறிப்பாக பொதுமக்கள் ஒரு முறை வழங்கும் மனுக்கள் மீண்டும் மீண்டும் வராத வகையில் மனுக்கள் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்று திங்கட்கிழமை 24.08.2026 நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டு மனை பட்டா, பட்டா மாறுதல், சாதி சான்று, வேலைவாய்ப்பு, வங்கி கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதி உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 503 மனுக்கள் வந்தன. இன்றையமக்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார்தலைமையில் நடைபெற்றது. அப்போது மாவட்ட வருவாய் அலுவலர் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பு வங்கி கடன் மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் தல ரூ 25000/= விதம் 7 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 1,75,000 மதிப்பிலும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 16,667 மதிப்பில் மதிப்பிலும் மற்றும் ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்ய ரூபாய் 50,000 வீதம் இரண்டு மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 1 லட்சம் மதிப்பிலும் என மொத்தம் 10 மாற்றுத் திறனாளிகளுக்கு 2,91,667 மதிப்பில் கடன் உதவிகளை வழங்கினார்.

## படர்ந்தபுளியில்

# வீ த லீடர்ஸ் அமைப்பு சார்பில் கண் சிகிச்சை முகாம்



விளாத்திகுளம் ஆகஸ்ட் 25. தூத்துக்குடி மாவட்டம் படர்ந்தபுளி கிராமத்தில் கடம்பூர் அருண் ராஜா அறிவுறுத்தலின் படி வீ த லீடர்ஸ் (We The Leaders) அமைப்பு மற்றும் அகர்வால் கண் மருத்துவமனை சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. மருத்துவர் ஷேக் அப்துல்லா தலைமையிலான மருத்துவ குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு கண் சிகிச்சை வழங்கினார்கள். மேலும் 5 நபருக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர். இந்த முகாமில் வீத லீடர்ஸ் உறுப்பினர்கள் அஸ்வின், காட்டுராஜா, அருணாச்சலம், வெங்கடேஷ் ,பொன்ராஜ், சுப்புராம், சரண்ராஜ்,சுபாஷ் மற்றும் சுற்றுவட்டார பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# தலைக்கவசம் அணிவது பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு!!

திருப்புர், ஆக25 நாம் தினசரி பயன்படுத்தும் சாலைக ளில் பாதுகாப்பாக செல்வது அனைத்து போக்குவரத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியும் அவர்களுக்கு விரிவாக எடுத்து தெற்கு போக்குவரத்து காவல்துறையினர் கூறினர். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் அதற்கு முதலில் நாம் உடலில் உயிர் இருக்க வேண்டும் நமது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண் டும் என்றும் பொதுமக்களுக்காக விழிப்புணர்வு மங்கலம் சாலையில் இருசக்கர வாகனத்தில் செல்பவர்களுக்கு விழிப்புணர்வு அறிவுரை எடுத்து கூறப்பட்டது. திருப்பூர்மாநகர காவல் ஆணையாளர் ராஜேஸ்வரி அவர்களின் உத்தரவின் படி போக்குவரத்து காவல் உதவி ஆணையாளர் ஏ. சேகர் அவர்களின் ஆலோசனையின் படி தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர். வெங்கடாசலம், உதவி ஆய்வாளர் ரமேஷ், மற்றும்போக்குவரத்து காவலர்கள் திருப்பூர் தெற்கு மாநகர போக்குவரத்து காவல்துறைக்கு உட்பட்ட பல்வேறுஇடங்களில் ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். மங்கலம் சாலை பழகுடோன் பஸ் ஸ்டாப் அருகில் வாகனத் தணிக்கைகள் நடைபெற்று வந்தது. இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு தலைக்கவசம் அணிவதின் பயன்கள் என்ன என்பதை பற்றி உதவி ஆய்வாளர் ரமேஷ் விளக்கமாக கூறினார். தலைக்கவசம் அணியாமல் வந்த வாகன ஓட்டிகளுக்கு அபதாரம் விதிக்கப்பட்டது. தெற்கு போக்குவரத்து காவலர்கள் அனைவரும் உடன் இருந்தனர்..

# அக்ஷயா தங்க மாளிகை முதல் விற்பனை நிலையம் திறப்பு விழா



சென்னை, ஆகஸ்ட் 25, சென்னை தி.நகர் பனகல் பூங்கா அருகே அக்ஷயா தங்க மாளிகை முதல் விற்பனை நிலையம் தொடங்கப்பட்டது.

அக்ஷயா தங்க மாளிகை பிராண்ட்டின் விளம்பரத் தூதரான நடிகர் சிவகார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இந்த விற்பனை நிலையத்தை தொடங்கி வைத்தார்.

திறப்பு விழாவில் பேசிய நடிகர் சிவகார்த்திகேயன் அக்ஷயா தங்க மாளிகை நாம் அனைவரும் புரிந்து கொண்டு ஒன்றிணையக் கூடிய ஒரு மொழியில் பேசுகிறது . அக்ஷயாவின் நகைகள், அணிகலன்கள் வாழ்வியலுடன் கலந்த ஒன்று. இது வெறும் நகை பிராண்ட் மட்டுமல்ல கடைக்குள் வரும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தரம் மற்றும் நியாயமான மதிப்பை வழங்கும் ஒரு நிறுவனமாகும். இந்த நிகழ்வில் நானும் இணைந்திருப்பதில் பெருமிதம் கொள்கிறேன் என்றார்.

இந்த புதிய பிராண்ட் குறித்து இதன் தாய் நிறுவனமான கலயாண் ஜூவல்லர்ஸின் நிர்வாக இயக்குநர் டி.எஸ். கல்யாணராமன் பேசுகையில், தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு முழுமையான உள்ளூர் உணர்வைத் தரும் நகை வாங்கும் அனுபவத்தை வழங்குவதோடு, எங்களின் பல ஆண்டு கால சில்லறை வணிக அனுபவத்தின் மூலம் சிறந்த சேவையை வழங்குவதே எங்கள் இலக்காகும் என்றார்.

# ஈரோடு கபாலீஸ்வரர் கோவிலுக்குள் புகுந்த பாம்பு: ஒரு மணி நேர போராட்டத்துக்கு பின் மீட்பு



ஈரோடு ஆகஸ்ட் 25 ஈரோடு மாநகரின்மையப் பகுதியில் பிரசித்தி பெற்ற கோட்டை பகுதியில் அமைந்துள்ள கபாலீஸ்வரர் கோவிலில் பாம்பு புகுந்ததால் பக்தர்கள் மத்தியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

கோவிலில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் பாம்பு ஒன்று நடமாடுவதை பூசாரி ஒருவர் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து உடனடியாக பாம்பு பிடி வீரர் யுவராஜுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது . தகவலின் பேரில் விரைந்து வந்த யுவராஜ், மாட்டுத் தொழுவத்திற்குள் பதுங்கியிருந்த பாம்பை லாவகமாக பிடிக்க முயன்றார். பாம்பு பிடிபடாமல் நீண்ட நேரம் போக்கு காட்டிய நிலையில், ஒரு மணி நேரத்துக்கும் மேலான போராட்டத்துக்குப்பிறகு பாம்பை பத்திரமாக மீட்டார்.

பின்னர் மீட்கப்பட்ட பாம்பு வனத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரசித்தி பெற்ற கபாலீஸ்வரர் கோவிலுக்குள் பாம்பு புகுந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# நாட்டின் எல்லைகள், நகர்ப்புறங்களில் ட்ரோன் தடுப்பு ரோந்துப் பணியை நிறுவிய இந்தியா



உள்நாட்டுப் பாதுகாப்பு வாகனங்களில் புதிய வகையினத்தை த இந்திரஜால் ரேஞ்சர்" அறிமுகப்படுத்துகிறது. இது அதிவேகமாக பயணிக்கும் போதே, அனுமதி பெறாத, தீங்கு விளைவிக்கக்கூடிய ட்ரோன்களை கண்டறிந்து, கண்காணித்து, அடையாளம் கண்டு, முறியடிக்கும் நோக்கத்திற்காகவே, பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட, ட்ரோன் எதிர்ப்பு திறன் (ஆன்டிட்ரோன்) கொண்ட ரோந்து வாகனமாகும் .

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக காவல்துறை வாகனங்கள் நகர வீதிகளில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வந்திருக்கின்றன. இப்போது இந்தியா வான்வெளியில் ரோந்து கண்காணிப்பு பணியைச் செய்யும் ஒரு புதிய வகை வாகனத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வந்திருக்கிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் தங்கள் ராணுவத் தளங்களுக்கு அதிநவீன ட்ரோன் தடுப்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தினாலும், நகர்ப்புறப் பாதுகாப்பைப் பொறுத்தவரை தனியார் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களையேபெரும்பாலும் சார்ந்துள்ளன. ஆனால், அரசாங்க அளவில் ட்ரோன் தடுப்பு ரோந்துப் பணியை செயல்படுத்துவதில் இந்தியாதற்போது முன்னிலை வகிக்கிறது. எல்லைப் பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற காவல் பணிகளுக்காக, பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட ட்ரோன் தடுப்பு ரோந்து வாகனங்களை, நீண்டகால உள்நாட்டுப் பாதுகாப்பு அரண் மற்றும் கவசமாக இந்தியா களமிறக்குகிறது.

இந்திய அரசாங்கத்திடம் இருந்து இந்திரஜால் ரேஞ்சருக்காக சுமார் ₹155 கோடி மதிப்பிலான ஆர்டர்கள் கிடைத்துள்ளதாக இந்திரஜால் அட்டானமஸ் டிஃபென்ஸ் சிஸ்டம்ஸ் மற்றும் சிக்மா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் ஆகிய நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இந்திரஜால்சிக்மா கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ள ₹145 கோடி மதிப்பிலான ஆர்டர், இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு ட்ரோன் எதிர்ப்பு திறனை வழங்குகிறது. மேலும், வ முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற பாதுகாப்பிற்காக ரேஞ்சரை பயன்படுத்தும் நோக்கத்திற்காக தோராயமாக ₹10 கோடி மதிப்பிலான தனி ஆர்டர் நகர்ப்புறக் காவல் துறைக்காக இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

# நாகர்கோவில் அரசு பள்ளி மாணவர் தற்கொலை மாணவர் உடலை 3வது நாளாக வாங்க மறுப்பு

நாகர்கோவில், ஆக. 25 நாகர்கோவில் அருகே உள்ள பூதப்பாண்டி பகுதியை சேர்ந்தவர் சேர்ந்த கவின் ஜெனில் (16) என்ற மாணவர் நாகர்கோவில் எஸ்எல்பி அரசு பள்ளியில் 11ஆம் வகுப்பு படித்து வந்தார். கடந்த சில நாட்களுக்கு முன் பள்ளி மாணவி ஒருவருடன் சேர்ந்து கவின் ரீல்ஸ் வீடியோ எடுத்துள்ளார்.

இது குறித்து தெரிந்த பள்ளி ஆசிரியர்கள் மாணவரை கண்டித்ததாக கூறப்படுகிறது. மேலும் இது தொடர்பாக பெற்றோருக்கும் தகவல் தெரிவித்தனர். இதனால் மாணவன் பள்ளிக்கு செல்லாமல் மனம் உடைந்த நிலையில் காணப்பட்டார். கடந்த 21ஆம் தேதி தனது வீட்டில் தற்கொலை செய்து கொண்டார்.

ஆசிரியர்கள் தாக்கியதால் மாணவன் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என மாணவரின் குடும்பத்தார் குற்றச்சாட்டு முன் வைத்து, கடந்த இரண்டு நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று மூன்றாவது நாளாகவும் மாணவர் உடலை அவர்கள் வாங்க மறுத்து போராட்டம் நீடித்து வருகிறது.

முதலில் மாணவர் தற்கொலை வழக்கு என பதிவு செய்த போலீசார் தற்கொலைக்கு தூண்டல் என மாற்றப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதாக போலீசார் கூறினார். ஆனாலும் மாணவர் உடலை வாங்க மறுத்து பெற்றோர் போராடி வருகிறார்கள். மாணவர் தற்கொலை சம்பவத்தில் பதட்டம் இருப்பதால் எஸ்எல் பி பள்ளிக்கு நேற்றும் 3 விடுமுறை அளிக்கப்பட்டது.

பள்ளியில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்

இந்த சம்பவத்தில் ஏற்கனவே தலைமையாசிரியர் தெய்வப்பிரியா இடலாக்குடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். உதவி தலைமை ஆசிரியராக பணியாற்றிய சாமுவேல் வல்லன் குமாரவிளை அரசு மேல்நிலைப்பள்ளிக்கும், உடற்கல்வி ஆசிரியர் பணியாற்றிய பிரேம் ராஜ் தோவாளை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் .

மேல துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னரும் உடலை வாங்க தொடர்ந்து மறுத்து வருவதால் போலீசார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு உள்ளனர்.



# தருமபுரியில் முதல்முறையாக கர்நாடக சங்கீத குரலிசை அரங்கேற்றம் விழா

தருமபுரி ஆகஸ்ட் 25
தருமபுரியில் முதல் முறையாக ஸ்ரீ த்யாகராஜ சங்கீத பள்ளி நடத்தும் "கர்நாடக சங்கீத குரலிசை அரங்கேற்றம் விழா" தனியார் பள்ளியில் நடைபெற்றது . இந்த நிகழ்ச்சிக்கு அருண்குமார் தலைமை தாங்கினார். விவேக்ராஜா முன்னிலைவகித்தனர். சிறப்பு விருந்தினராக கர்நாடகா இசைப்பாடகி & திரைப்பட பின்னணிப் பாடகி மஹதி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். செல்வி.யுக்தா ஆனந்த சத்தியசீலன் கர்நாடக சங்கீத குரலிசை அரங்கேற்றம் நிகழ்வை நடத்தினார் . இதைதொடர்ந்துசெல்வி. யுக்தா ஆனந்த சத்தியசீலன் மற்றும் இசை கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. மேலும் இவர் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 50 க்கும் மேற்பட்ட விருதுகளை வாங்கியுள்ளார். இந்த இசை நிகழ்ச்சியில் பல்வேறு கர்நாடக இசை பாடல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இதில் தருமபுரி நகரபகுதியிலிருந்து கர்நாடக இசை கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் சங்கீத குரலிசையை கேட்டு மகிழ்ந்தனர். இறுதியாக சரண்யா இராமகிருஷ்ண நன்றி கூறினார்.

# திருப்பூரில் உள்ள தனியார் மகளிர் கல்லூரியில் ஓணம் பண்டிகை கொண்டாட்டம்




திருப்பூர் ஆக,25
திருப்பூர் மங்கலம் சாலையில் உள்ள திருப்பூர் குமரன் தனியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் சுமார் 2500 க்கும் மேற்பட்ட மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர்.
இந்த கல்லூரியில் ஆண்டுதோறும் ஓணம் பண்டிகையை முன்னிட்டு ஓணம் திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது, அந்த வகையில் நடப்பாண்டு ஓணம் திருவிழாவை முன்னிட்டு இன்று கல்லூரியில் பயிலும் மாணவிகள் கேரள பாரம்பரிய உடை அணிந்தும், மகாபலிசக்கரவர்த்தி வேடம் அணிந்தும் , அத்தபூ கோலமிட்டு, ஓணம் பண்டிகையை வரவேற்று கொண்டாடினர் . தொடர்ந்து மாணவிகளை உற்சாகப்படுத்தும் வகையில் கல்லூரி நிர்வாகம் சார்பில் செண்டை மேள நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் ஏராளமான மாணவிகள் பங்கேற்று உற்சாகமாக நடனமாடி மகிழ்ந்தனர். தொடர்ந்து கல்லூரி மாணவிகள் சார்பில் நடன போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. செண்டை மேள நிகழ்ச்சிகளுடன், டிஜே பாடல்கள் இசைக்கப்பட்டது இதில் அனைத்து மனைவிகளும் பங்கேற்று உற்சாகமாக நடனமாடி மகிழ்ந்தனர்



# பாலக்கோடு பேருந்து நிலையத்தில் கழிவுநீர் கால்வாய் அமைக்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

தருமபுரி ஆகஸ்ட் 25
தருமபுரி மாவட்டம் பாலக்கோடு பேருந்து நிலையத்தில் கழிவுநீர் கால்வாய் அமைக்கக் கோரி, தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக ஆர்வலர் சிவா மனு அளித்தார். மனுவில் கூறியிருப்பதாவது. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வெளியூர் மற்றும் உள்ளூர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
தினந்தோறும் நூற்றுக்கணக்கான கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கின்றனர். பேருந்து நிலையத்தின் உட்புறத்தில் பல்வேறு கடைகள் செயல்பட்டு வருகின்றன.
இந்தக் கடைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை வெளியேற்றுவதற்கு முறையான கழிவுநீர் கால்வாய் வசதி இல்லை.
இதனால் கடைகளின் முன்பகுதியிலும், பொதுமக்கள் நடமாடும் பகுதிகளிலும் கழிவுநீர் தேங்கி நிற்கிறது. இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதுடன், பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, பேருந்து நிலையத்தில் கழிவுநீர் தேங்கி நிற்பதைத் தடுக்க புதிய கழிவுநீர் கால்வாய் அமைத்து, கடைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை அக்கால்வாயுடன் இணைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கோபியில் விஜிளம் பல்துறை சிறப்பு மருத்துவ மையம் அமைச்சர் செங்கோட்டையன் திறந்து வைத்தார்



கோபி ஆக 25
கோவை விஜிளம் மருத்துவமனையின் முதல் செயற்கைக்கோள் பல்துறை சிறப்பு மருத்துவ மையம் கோபயில் திறக்கப்பட்டது . இதை அமைச்சர்த கே. ஏ. செங்கோட்டையன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். ரோட்டரி முன்னாள் ஆளுநர் சண்முகசுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வாழ்த்தி பேசினார். முன்னதாக விஜி எம் மருத்துவ மனையின் நிறுவன தலைவர் டாக்டர் வி ஜி மோகன் பிரசாத் வரவேற்றார். அப்போது அவர் கூறியதாவது கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உலகத்தரத்திலான உயர்தர மருத்துவ சேவைகளை அவர்களது பகுதிக்கு அருகிலேயே வழங்கும் நோக்கில், கோவை விஜிளம் மருத்துவமனை இந்த புதிய பல்துறை சிறப்பு மருத்துவ மையத்தை தொடங்கியுள்ளது தரமான மருத்துவ சேவை அனைவருக்கும் எளிதாகக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்தின் மூலம் கோபிச்செட்டிப்பாளையம், பவானி, அந்தியூர், சத்தியமங்கலம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பல்வேறு சிறப்பு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை தங்களது பகுதிக்கு அருகிலேயே பெற முடியும். இங்கு அவசர மற்றும் சிக்கலான மருத்துவ நிலைகளில் தேவையான ஒருங்கிணைந்த சிகிச்சை வசதிகளை கோவை விஜிளம் மருத்துவமனையின் பிரதான மையத்துடன் இணைந்து வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இங்கு 3 டாக்டர் கள் பணியில் இருப்பார்கள். மேலும் அனைத்து தொழில்நுட்ப கருவிகளும் இந்த ஆஸ்பத்திரியில் உள்ளன. இதன் மூலம் அனைத்து நோய்களுக்கும் இங்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதனால் இந்த ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளிகள் கோவை போன்ற ஆஸ்பத்திரிகளுக்கு செல்ல வேண்டியது இல்லை.
இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் டாக்டர்கள் சுமன், வம்சி மூர்த்தி, மதுரா பிரசாத் மித்ரா பிரசாத் ரங்கநாதன், ரகுநாதன், ரமேஷ்பாபு, தனபால், கணேசன், மோகன், குழந்தைசாமி, குமரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் நடந்த போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி

## 500 க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு




ஈரோடு ஆக 25
ஈரோடு மாவட்ட மாஸ்டர்ஸ் தடகள சங்கம் சார்பாக போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி ஈரோடு ரெயில்வே இன்ஸ்டிடியூட் வளாகத்தில் நடைபெற்றது. பல்வேறு பிரிவுகளில் இந்த மராத்தான் போட்டியில் 500 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் பங்கேற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்து வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுத்தொகையும், பதக்கங்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது . மேலும் போட்டி துவங்கும் முன் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக உறுதிமொழி எடுக்கப்பட்டது . இப்போட்டிக்கான ஏற்பாடுகளை ஈரோடு மாவட்ட மாஸ்டர்ஸ் தடகளசங்க தலைவர் சிவசங்கரன் , செயலாளர் தங்கவேலு, துணைசெயலாளர் முனைவர். கருணாநிதி ஆகியோர் செய்திருந்தனர்.




வேலூர் மாநகரம் ஆரணி சாலையில் மெக் கிங்ஸ் டவுன் ஆண்கள் அழகு நிலையம் திறப்பு விழா உரிமையாளர் மணிகண்டன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பாக வேலூர் எம்எல்ஏ எம்.எம்.வினோத் கண்ணன் ரிப்பன் வெட்டி திறந்து வைக்க, காட்பாடி எம்எல்ஏ எம்.சுதாகர் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர். திறப்பு விழாவையொட்டி ஏராளமான சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உரிமையாளர் மணிகண்டன் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.

# கொட்டும் மழையிலும் தவெக 100 நாள் சாதனை பொதுக்கூட்டம்: சாதனைகளை விளக்கி பூந்தமல்லி எம்எல்ஏ உரை



தமிழக வெற்றிக்கழக ஆட்சி அமைந்து 100 நாட்கள் ஆனதை தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் அனைத்து தொகுதிகளிலும் 100 நாள் சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன,
அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி தொகுதிக்கு உட்பட்ட ஈக்காடு பகுதியில் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஹரிபாபு, தலைமையில் நடைபெற்றது,
இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினரும், தமிழக வெற்றி கழகத்தின் தெற்கு மாவட்ட செயலாளருமான பிரகாசத்திற்கு ஈக்காடு கிளை சார்பில் பிரம்மாண்ட ரோஜா பூமாலை அணிவித்தும், புல்லரம்பாக்கம், கிளை சார்பில் வீரவால் கொடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாசம், நிகழ்ச்சியில் பேசிக் கொண்டிருந்தபோது திடீரென்று மழை பொழிய தொடங்கியது, அதனால் பொதுமக்கள் சாலையோரம் உள்ள கடைகளுக்குள் சென்று ஓரமாக நின்றனர்ஆனால் மழையை சற்றும் பொருட்படுத்தாத பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் பிரகாசம், கொட்டும் மழையில் முழுவதுமாக நனைந்த நிலையிலும் தமிழ்நாடு அரசின் 100 நாள் சாதனையினை விளக்கி சிறப்புரை ஆற்றினார்,
முன்னதாக பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் வடக்கு ஒன்றிய பகுதியிலுள்ள பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள குறைகளை புகாராக அளிக்க புதிய செயலியை பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் பிரகாசம் வெளியிட்டார்,

# இலவச வேஷ்டிசேலை நூல் விடுவிப்பு மற்றும் கூலி உயர்வு அறிவிப்பை உடனடியாக வெளியிட விசைத்தறி கூட்டமைப்பு கோரிக்கை



ஈரோடு ஆகஸ்ட் 25
பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மக்களுக்கு வழங்கப்படும் இலவச வேஷ்டி மற்றும் சேலை உற்பத்திக்குத் தேவையான நூல்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும், புதிய வடிவமைப்புக்கு ஏற்ப கூலி உயர்வு அறிவிப்பை வெளியிட வலியுறுத்தியும் ஈரோட்டில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கைத்தறி துறை உதவி இயக்குநரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. மாநிலத் தலைவர் எல்.கே.எம். சுரேஷ் மற்றும் மாநில பொருளாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில் ஈரோடு, சித்தோடு, லக்காபுரம், வீரப்பன்சத்திரம் உள்ளிட்ட பல்வேறு சங்க நிர்வாகிகளின் முன்னிலையில் இந்த மனு வழங்கப்பட்டது.
தமிழகத்தில் பல லட்சம் விசைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரமாக விளங்கும் இத்திட்டத்திற்கான அரசாணை கடந்த ஜூலை 1ஆம் தேதி வெளியிடப்பட்டு முதற்கட்டமாக ரூ.300 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், 50 நாட்களுக்கு மேலாகியும் நூல் டெண்டர் பணிகள் நிறைவடையாமலும், கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து நூல் விடுவிக்கப்படாமலும் உற்பத்தித் தொடங்குவதில் தாமதம் நீடித்து வருகிறது. இதனால் கடந்த இரண்டு மாதங்களாக வேலை வாய்ப்பின்றி நெசவாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், உடனடியாக நூல்களை விடுவித்து உற்பத்திப் பணிகளைத் தொடங்குவதோடு, புதிய வடிவமைப்புக்கு ஏற்ப கூலி உயர்வையும் அரசு உடனே அறிவிக்க வேண்டும் என தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

# ஈரோட்டில் சொத்தை ஏமாற்றி பறித்துக் கொண்ட மகன் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி 88 வயது மூதாட்டி மாவட்ட ஆட்சியரிடம் மனு



ஈரோடு ஆகஸ்ட் 25
ஈரோடு திண்டல் பகுதியைச் சேர்ந்த 88 வயதான மூதாட்டி கிருஷ்ணவேணி என்பவர், நேற்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் ஆட்சியரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.
அந்த மனுவில், தனக்கும் தனது மறைந்த கணவர் பொன்னுசாமிக்கும் சொந்தமாக நசியனூர் பகுதியில் 2 வீடுகளும், 25 ஏக்கர் விவசாய நிலமும் இருந்ததாகவும், கணவர் மறைவுக்குப் பிறகு தனது மகன் ஜெயக்குமார் தங்களை பராமரிப்பதாகக் கூறி ஏமாற்றி, மோசடியாக உயில் சாசனம் மற்றும் தானசெட்டில்மெண்ட் ஆவணங்களைத் தயாரித்து சொத்துக்களைத் தன் பெயருக்கு மாற்றிக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
தற்போது தன்னை வீட்டை விட்டு வெளியேற்றிப் பராமரிக்க மறுப்பதால், பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நல வாழ்வுச் சட்டம் 2007ன் கீழ் மோசடியாகப் பெறப்பட்ட ஆவணங்களை ரத்து செய்து, சொத்துக்களையும் தனக்கான வாழ்வாதாரத்திற்கு மாதம் ரூ.50,000 ஜீவனாம்சத் தொகையையும் மீட்டுத்தர வேண்டும் என்றும், தனக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் அம்மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

# குடிநீர் வழங்க வலியுறுத்தி விளாத்திகுளம் யூனியன் அலுவலகம் முன்பு பூசனூர் கிராம மக்கள் போராட்டம்



விளாத்திகுளம் ஆகஸ்ட் 25 .
விளாத்திகுளத்தில் இருந்து தூத்துக்குடி செல்லும் சாலையில் பூசனூர் கிராமம் உள்ளது. இப்பகுதி பொதுமக்களுக்கு விளாத்திகுளம் வைப்பார் ஆற்றுப் பகுதியில் போர்வெல் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் முறையாக குடிநீர் வழங்கவில்லை என்பதை வலியுறுத்தி அப்பகுதி பொதுமக்கள் விளாத்திகுளம் யூனியன் அலுவலகம் முன்பு அமர்ந்து முறையான குடிநீர் வழங்க வலியுறுத்தி மனு வழங்கிய போராட்டம் நடத்தினர். அதனைத் தொடர்ந்து அதிகாரிகள் வந்து பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்ததை தொடர்ந்து மக்கள் கலைந்து சென்றனர். மனுவில், எங்கள் பூசனூர் கிராமத்தில் கடந்த 4 மாதங்களாக குடிநீரின்றி பொதுமக்கள் தவித்து வருகிறோம். பூசனூர் கிராமத்திற்கு மொத்தம் 5 குடிநீர் டேங்க் உள்ளது. அதில் 4 டேங்கில் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிக்கு மட்டும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிநீர் பெற்று தரும்படி கேட்டுக்கொள்கிறோம் என்று கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் அரசு பேருந்து வழித்தட நீட்டிப்பு மற்றும் கூடுதல் புறநகர் பேருந்து சேவை



சேலம், ஆக. 25
தமிழகத்தில் எந்த கிராமமும் போக்குவரத்து வசதியின்றி இருக்கக் கூடாது என்ற நோக்கில், பொதுமக்கள், மாணவர்கள், பெண்கள், முதியோர் மற்றும் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பேருந்து வழித்தடங்கள் நீட்டிக்கப்பட்டு வருகின்றன.
அதன்படி, சேலம் மாவட்டத்தில் பல்வேறு புதிய பேருந்து சேவைகள் மற்றும் வழித்தட நீட்டிப்புகளை தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தொடங்கி வைத்தார். எடப்பாடி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், எடப்பாடி–ஜலகண்டாபுரம் வழித்தட எண் 20 நகரப் பேருந்து, ஜலகண்டாபுரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி வரை நீட்டிக்கப்பட்டது. மேலும், தாரமங்கலம்–ஜலகண்டாபுரம் வழித்தட எண் 38 பேருந்து, அடுவாபட்டி ஊருக்குள் சென்று வரும் வகையில் நீட்டிக்கப்பட்டது.
நங்கவள்ளி பேருந்து நிலையத்தில், எட்டிக்குட்டைமேடு–தாரமங்கலம்–சேலம் புதிய பேருந்து நிலையம் வழியாக சேலம் நகர பேருந்து நிலையம் வரை வழித்தட எண் 47 புதிய வழித்தடத்தில் இயக்கப்பட்டது. நங்கவள்ளியில் இருந்து கோவை வரை கூடுதல் புறநகர் பேருந்து சேவையும் தொடங்கப்பட்டது. ஓமலூர் பேருந்து நிலையத்தில், ஓமலூர்–காமலாபுரம்–தீவட்டிப்பட்டி வழியாக நைனாகாடு வரை வழித்தட எண் 97 நகரப் பேருந்து நீட்டிக்கப்பட்டது. இதன் மூலம் கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதி மேம்பட்டு, கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட அன்றாட தேவைகளுக்கு பொதுமக்கள் எளிதில் பயணிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.



வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மோர்தானா கிராமம் கௌண்டன்யா ஆற்றின் குறுக்கே உள்ள மோர்தானா அணையிலிருந்து பாசன வசதிக்காகவும் மற்றும் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்காகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலா அலெக்ஸ் இ.ஆ.ப., அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது நீர்வளத்துறை செயற்பொறியாளர் சோபானா, குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் .செந்தில்குமார், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் .கோபி, வட்டாட்சியர் பிரியா, குடியாத்தம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஹேமலதா, மோர்தானா ஊராட்சி மன்ற தலைவர் .பரந்தாமன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# திருப்பத்தூரில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்




திருப்பத்தூர்:ஆக:25

, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கு. ரவிகுமார், பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முதன்மைதிட்டமான உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் வரபெற்ற மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் 67607 அனைத்துத் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார். மேலும் வருவாய் துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித் துறை, வனத்துறை, நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப்பட்டா, முதியோர் உதவித் தொகை, கூட்டுறவு கடனுதவி, தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் சார்பாக வீடுகள் வேண்டி, மின்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்திட்ட உதவிகள், மருத்துவத்துறை, கிராம பொதுப்பிரச்சனைகள், குடிநீர் வசதி மற்றும் பொது நலன் குறித்த மனுக்கள் என மொத்தம் 610 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.இதனைத் தொடர்ந்து, மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.8,000/ மதிப்பிலான சக்கர நாற்காலியும்,01மாற்றுத்திறனாளிக்குரூ.14,500/ மதிப்பிலான கைத்திறன்பேசியும் என மொத்தம் 03 நபர்களுக்கு ரூ. 30 ஆயிரத்து 500/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

# திருக்காட்டுப்பள்ளி அருகே காளாப்பிடாரி கோவில் பூமி பூஜை

## முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பங்கேற்பு



தஞ்சாவூர் ஆகஸ்ட் 25 தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப் பள்ளி அருகே உள்ள நேமம் சப்த கன்னியர் மாகாளத்து காளாப்பிடா ரி கோவில் பூமி பூஜை விழாவில் முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பங்கேற்றார் தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அடுத்துள்ள நேமம் கிராம த்தில் வயல் வெளியில் அமைந்து ள்ள மாகாளத்து காளாப்பிடாரி கோவிலில் பூமி பூஜை விழாவும், பொரும்பிடுகு முத்தரையர் சுவரன் மாறன் 1351 வது சதய விழா, பெரும்பிடுகு முத்தரையருக்கு தபால் தலை வெளியிட்டு மத்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கும் விழா ஆகிய முப்பெரும் விழா நடந்தது

விழாவில் முன்னால் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் கலந்து கொண்டு காளபிடாரி கோவில் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி, கல் வெட்டை திறந்து வைத்து பணிகளை தொடங்கி வைத்தார் அப்போது மாகாளத்து காளாப் பிடாரிக்கு முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தீபம் ஏற்றி வழிபாடு செய்தார். விழாவில் அமைச்சர் ரமேஷ், விஜய் சரவணன் எம்எல்ஏ ,தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்க மாநில இளைஞ ரணி தலைவர் பரதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

விழாவில் முன்னதாக முன்னாள் ஜனாதிபதி, அமைச்சர் மற்றும் எம்எல் ஏவுக்கு மலர் மாலை அணி வித்து பரிவட்டம் கட்டி கோயில் நிர்வாகத்தினர் வரவேற்பு அளித்தனர்

# திருப்பூரில் தவெக பொதுக்கூட்டம்: "அதிமுகவை அரசியல் ட்ரீட்மென்ட் செய்து ஆபரேஷன் சக்சஸ் செய்தார் செங்கோட்டையன்" – அமைச்சர் அருண்ராஜ்



திருப்பூர், ஆக. 25

தமிழக வெற்றி கழக அரசின் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் திருப்பூர் சிவன் தியேட்டர் பகுதியில் நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் கே.ஏ. செங்கோட்டையன், அருண்ராஜ், திருப்பூர் வடக்கு எம்எல்ஏ சத்தியபாமா உள்ளிட்டோர் பங்கேற்றனர். 2,000க்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் செங்கோட்டையன், தமிழக அரசியலில் தவெக தலைவர் தளபதி வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், மக்கள் மாற்றத்தை விரும்பியதால் புதிய ஆட்சி உருவானதாகவும் தெரிவித்தார். சட்டப்பேரவை கூட்டத்தொடர் முடிந்ததும் அனைவரும் ஒன்றிணைந்து திருப்பூர் குப்பைப் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்போம் என்றும் கூறினார்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண் ராஜ் பேசுகையில், தவெக ஆட்சி அமைந்தது அரசியல் புரட்சியின் தொடக்கம் எனக் குறிப்பிட்டார். சாதாரண மக்களும் அரசியலில் வெற்றி பெறும் வாய்ப்பை தவெக உருவாக்கியுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், புதிய ஆட்சியில் விரைவாக டிஜிபி நியமிக்கப்பட்டதாகவும், லஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அதிமுக குறித்து பேசிய அவர், "நான் மருத்துவத்தில் டாக்டர்; செங்கோட்டையன் அரசியல் டாக்டர். சரியான ட்ரீட்மென்ட் செய்து 'ஆபரேஷன் சக்சஸ், அதிமுக பேஷன்ட் டெத்' என்ற நிலையை உருவாக்கிவிட்டார்" என விமர்சித்தார்.

மேலும், எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலுக்கு மக்கள் தயாராக வேண்டும் என்றும், திமுகவின் ஊழல் குறித்து மக்கள் மன்றத்தில் தொடர்ந்து அம்பலப்படுத்துவோம் என்றும் அமைச்சர் அருண் ராஜ் தெரிவித்தார்.



# பைங்குளம் ஊராட்சி தூய்மை பணியாளர்கள் மீது தாக்குதல் ஊராட்சி அலுவலகம் முன்பு திடீர் முற்றுகை போராட்டம்

புதுக்கடை, ஆக.25

தமிழ்நாட்டில் பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் மிகப்பெரிய ஊராட்சியாக பைங்குளம் கிராம ஊராட்சி உள்ளது. இந்த ஊராட்சியில் தூய்மை பணியாளராக வழுதுரரை சேர்ந்த மனோன்மணி, சாந்தி ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் கடந்த 18ஆம் தேதி அம்சி குளத்தங்கரையில் சக பணியாளர்களுடன் தூய்மை பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, காக்கிறவிளை பகுதியை சேர்ந்த காமராஜ் என்பவரின் மகன் அஜின் ( 33 ) என்பவர் இவர்கள் வேலை பார்க்கும் இடத்தில் புகுந்து மனோன்மணியை சரமாரியாக தாக்கியுள்ளார். இதில் அவரது உடலில் ரத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இதை தடுக்கச் சென்ற சாந்தி என்ற தூய்மை பணியாளரையும் தாக்கியுள்ளார். காயமடைந்தவர்கள் குமரி அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தூய்மை பணியாளர்கள் தாக்குதல் குறித்து பைங்குளம் ஊராட்சி செயலாளர் சுதர்சனன், சோனல் ஆபீஸர் ரெஜி ஆகியோர் புதுக்கடை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். இந்நாள் வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

இதனால் நேற்று காலையில் திடீரென கூடிய தூய்மை பணியாளர்கள் தங்களுக்கு வேலையில் பாதுகாப்பு இல்லை எனக் கூறி தங்களை தாக்கிய வரை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுதிடீரென ஊராட்சி அலுவலகம் முன்பு முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தை தொடர்ந்து முஞ்சிறை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ராஜகுமார், புதுக்கடை இன்ஸ்பெக்டர் மீனா, சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் தூய்மை பணியாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர்.

ஐந்து நாட்களுக்குள் கைது செய்யப்படும் என போலீசார் உறுதி அளித்த பின்னர் போராட்டக்காரர் கலைந்துதங்கள்பணியை பார்க்க துவங்கினர்.



# தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தருமபுரி ஆகஸ்ட் 25

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சரவணன்தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, இலவச வீட்டு மனைபட்டா ,பட்டா சிட்டா பெயர் மாற்றம், முதியோர் உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகள் உபகரணங்கள், உதவித்தொகை வேண்டி ஆட்சியரிடம் பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மனுக்களை பெற்றுக்கொண்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்த கூட்டத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகள், தெரு நாய்களால் கடிக்கப்பட்டு உயிரிழந்த உயிரினங்களின் 7 உரிமையாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1.38 லட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சியர் சரவணன் வழங்கினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை திட்ட இயக்குனர் மதுமதி, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் ஜார்ஜ், அரூர் வருவாய் கோட்டாட்சியர் செம்மலை உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# சூளகிரியில் இருந்து அஞ்செட்டிக்கு புதிய பேருந்து இயக்க கோரிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள், கூலி வேலைக்காக அஞ்செட்டி, தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளுக்கு தினமும் சென்று வருகின்றனர். போதிய பேருந்து வசதி இல்லாததால், சூளகிரியில் இருந்து ஓசூர் சென்று அங்கிருந்து வேறு பேருந்தில் பயணிக்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் பொதுமக்கள், குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எனவே, சூளகிரியில் இருந்து நாயக்கோட்டை, கொலமங்கலம், தேன்கனிக்கோட்டை வழியாக அஞ்செட்டிக்கு நேரடி பேருந்து இயக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சியின் எஸ்.சி., எஸ்.டி. பிரிவு சார்பில் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், மீண்டும் நினைவூட்டும் வகையில் காங்கிரஸ் எஸ்.சி., எஸ்.டி. பிரிவு மாநிலச் செயலாளர் மூர்த்தி, மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமாரிடம் கோரிக்கை மனு அளித்தார். அந்த மனுவில், சூளகிரி மற்றும் சுற்றுப்புற கிராமமக்களின்வேலைவாய்ப்புமற்றும்வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, சூளகிரியில் இருந்து ராயக்கோட்டை வழியாக அஞ்செட்டிக்கு புதிய வழித்தட பேருந்து சேவை தொடங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஈரோடு அம்பேத்கர் நகரில் ஆபத்தான நிலையில் 256 வீடுகள்: முதலமைச்சரின் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி ஆட்சியரிடம் மக்கள் மனு



ஈரோடு ஆகஸ்ட் 25

ஈரோடு மாநகராட்சி 21 வது வார்டு நாராயணவலசு அம்பேத்கர் நகர் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக 256 அருந்ததியர் குடும்பங்கள் 80 சதுர அடி பரப்பளவிலான பழுதடைந்த மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள குடியிருப்புகளில் வசித்து வருகின்றன.

கடந்த 2023ஆம் ஆண்டு பிப்ரவரி 25 அன்று அப்போதைய முதலமைச்சர் நேரில் ஆய்வு செய்து, பழுதடைந்த வீடுகளை அகற்றிவிட்டு 400 சதுர அடி பரப்பளவில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என உறுதியளித்தார்.

ஆனால், தற்போது வரை அப்பகுதியில் டிஜிட்டல் சர்வே (ETS) மூலம் நிலத்தின் எல்லை நிர்ணயம் செய்யப்படாமலும், சட்டவிரோத ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமலும் உள்ளதால் புதிய வீடுகள் கட்டும் திட்டம் காலதாமதமாகி வருகிறது.

எனவே, வாரியத்திற்குச் சொந்தமான 2.68 ஏக்கர் நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, முதலமைச்சரின் வாக்குறுதிப்படி 256 குடும்பங்களுக்கும் 2 ஆண்டுகளுக்குள் 400 சதுர அடியில் G+2 அல்லது G+3 அடுக்குமாடி வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்றும், கட்டுமானக் காலத்தில் மாதாந்திர வாடகைத் தொகை அல்லது தற்காலிக மாற்று இட வசதி செய்து தர வேண்டும் என்றும் வலியுறுத்தி பொதுமக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியர் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திடம் கோரிக்கை மனு அளித்தனர்.

# நங்கவள்ளி தனியார் வேலைவாய்ப்பு முகாம்: தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணை



சேலம்

தமிழக அரசு, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் அனைத்து மாவட்டங்களிலும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சேலம் மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான முதல் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நங்கவள்ளி கைலாஷ் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

முகாமில் 185 முன்னணி தனியார் நிறுவனங்கள் பங்கேற்று, 8ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு, ஐடிஐ, டிப்ளமோ, பொறியியல், நர்சிங் உள்ளிட்ட பல்வேறு கல்வித் தகுதிகளின் அடிப்படையில் பணியாளர்களைத் தேர்வு செய்தன.

மதியம் 3 மணி வரை 1,267 ஆண்கள், 2,889 பெண்கள் மற்றும் 75 மாற்றுத்திறனாளிகள் என மொத்தம் 4,231 பேர் பங்கேற்றனர். இதில் 545 ஆண்கள், 892 பெண்கள், 20 மாற்றுத்திறனாளிகள் என மொத்தம் 1,457 பேர் பல்வேறுநிறுவனங்களில் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகளைபெற்றனர். மேலும், 484 பேர் முதல் கட்டத் தேர்வில் தேர்ச்சி பெற்று இரண்டாம் கட்டத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

அரசுப் பணிக்குத் தயாராகும் இளைஞர்களுக்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இலவச போட்டித் தேர்வு பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் இதுவரை 2,500க்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்றதில் 563 பேர் தேர்ச்சி பெற்று அரசு பணிகளில் சேர்ந்துள்ளனர். தற்போது டிஎன்பிஎஸ்சி குரூப்1 மற்றும் குரூப்2 தேர்வுகளுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இளைஞர்கள் மற்றும் பெண்கள் இத்தகைய வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் இலவச பயிற்சி வகுப்புகளை பயன்படுத்தி தங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் கேட்டுக் கொண்டார்.

# குப்பைகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை நுண்ணுயிர் உரம் 14 கோட்டங்களில் விற்பனை

## மாநகராட்சி ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரி தகவல்



தஞ்சாவூர் ஆகஸ்ட் 25

தஞ்சாவூர் மாநகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளில் இருந்து தயாரிக்கப்படும் இயற்கை நுண்ணுயிர் உரம் கோட்டங்களில் விற்கப்படுகிறது என்று மாநகராட்சி ஆணையர் தீபனா விஸ்வேஸ் வரி தெரிவித்துள்ளார்

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தூய்மை பணியாளர்களைக் கொண்டு மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் நாள்தோறும் 4 விதமாக தரம் பிரித்து வாங்கப்பட்டு வரு கிறது மக்கும் கழிவுகளான சமைய லறை கழிவுகள் ,காய்கறி கழிவுகள் பூக் கழிவுகள், பழக்கழிவுகள், முட்டை ஒடு, காப்பித்தூள் போன்ற இயற்கை கழிவுகள் பெறப்பட்டு மாநகராட்சிக்குட்பட்ட 12 நுண்ணு யிர் செயலாக மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பதப்படுத்தப்பட்டு வருகிறது இதனை 45 நாட்களுக்குப் பிறகு உரமாக்கப்பட்டு பொதுமக்கள் வியாபாரிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த உரமானது வேளாண்மை துறையி டமிருந்து தரச் சான்று பெற்றதாகும் இந்த உரத்தினை பூச் செடிகள், தோட்டப் பயிர்கள், வாழை மரங்கள் போன்ற அனைத்து விதமான செடி கொடிகளுக்கு உரமாக பயன் படுத் திக் கொள்ளலாம் .இந்த உரம் கிலோ 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது

இந்த இயற்கை நுண்ணுயிர் உரத்தை தஞ்சாவூர் மாநகராட்சிக்கு ட்பட்ட 14 கோட்டங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். 14 கோட்டங்கள் உள்ள கரந்தை , கவாடிக்காரத் தெரு , கீழவாசல் சரபோஜி மார்க்கெட், மகர்நோன்பு சாவடி, மாநகராட்சி அலுவலகம், மகர்நோன்பு சாவடி நகர் புற ஆரம்ப சுகாதார நிலையம், கல்லுக்குளம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், சிவாஜி நகர் ,முனிசிபல் காலனி, அண்ணாநகர், புதிய பஸ் நிலையம் ,அம்மா பூங்கா அருகில் உள்ள இடங்களில் இந்த உரம் விற்பனைக்கு உள்ளது

மேலும் இது தொடர்பாக மாநகரா ட்சி உதவி எண் 18004251100மூலம் தகவல்களைதெரிந்துகொள்ளலாம் என மாநகராட்சி ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரி தெரிவித்துள்ளார்.



நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்ற வலியுறுத்தி கோவை கணபதி மாநகர் வீட்டு உரிமையாளர்கள் நலச் சங்கத்தினர் முட்டிப்போட்டு கண்களை கட்டிக்கொண்டு நூதன முறையில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.